[2013 மே 6

397—

அங்கன்வாடி மையம்

***18590—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஊராட்சி ஒன்றியம், தச்சக்குடி கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்தினைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, சிவகாசி வட்டாரம், தச்சக்குடி ஊராட்சி, தச்சக்குடி கிராமத்தில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது. தச்சக்குடி கிராமத்தில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருவதால் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் தொகுதி, சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தின் தலைக் கிராமமான தச்சக்குடி கிராமத்தில் சுமார் 180 குடும்பங்கள் வசிக்கின்றன. இப்பகுதியிலுள்ள 60 குழந்தைகள் அங்குள்ள அங்கன்வாடி மையத்தில் பயின்று வந்தார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்த அங்கன்வாடி மையம் மிகவும் பழுதடைந்திருப்பதால், அந்தக் குழந்தைகள் தற்பொழுது அருகிலுள்ள நூலகத்தில் பயின்று வருகிறார்கள். பழுதடைந்த அந்த அங்கன்வாடி மையத்திற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் இதற்கு இரண்டு வருடங்களாக*

2013 மே 6]

நிதி கொடுத்திருந்தோம், அது இன்னும் செயல்படாமல் இருப்பதால் புதியதாகக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைத்தான் நாங்கள் கேட்டுள்ளோம். அநேகமாக எனது தொகுதியில் மூன்றில் ஒரு பங்கு அங்கன்வாடி மையங்கள் பழுதடைந்திருக்கின்றன; புதிதாகக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்ட வேண்டுமெனில், கட்ட முடியவில்லை. எனவே, தச்சக்குடி கிராமத்தில் இருக்கிற அங்கன்வாடி மையத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தச்சக்குடி கிராமத்திலுள்ள மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை–154, மக்கள்தொகை எண்ணிக்கை–518, ஆண்கள்–282, பெண்கள்–236. தச்சக்குடி கிராமத்தில் ஏற்கெனவே அங்கன்வாடி மையம் அரசுக் கட்டடத்தில்தான் தற்போது செயல்பட்டு வருகிறது. அதுமட்டுமல்ல, 400 மக்கள்தொகை இருக்கின்ற பகுதிகளில்தான் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசு விதிப்படி நிர்ணயம் செய்திருக்கிறது. அதனடிப்படையிலேதான், தச்சக்குடி கிராமத்தில் இப்போது அங்கன்வாடி மையம் இருக்கிறது. பக்கத்தில் ஒரு அங்கன்வாடி மையம் வேண்டுமென்று கேட்டால், பக்கத்திலேயே அரை கிலோ மீட்டர் தூரத்திலேயே குப்பணாபுரம் என்கிற கிராமத்தில் இன்னொரு அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் தொகுதியில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன என்று கூறியுள்ளார். பழுதடைந்த நிலையிலே, மோசமான நிலையிலே இருக்கிற அங்கன்வாடி மையங்களையெல்லாம் சரி செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையிலே, விருதுநகர் மாவட்டத்திலேயும் பழுதடைந்த அங்கன்வாடி மையங்கள் கணக்கிடப்பட்டுள்ளன. அவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கக்கூடிய

[2013 மே 6

கட்டடங்களில், தச்சக்குடி பகுதியிலுள்ள அங்கன்வாடி மையமும் கணக்கிடப்பட்டுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பழுதடைந்துள்ள கட்டடங்களை நிச்சயமாக சரி செய்து தரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. பழுதடைந்த அங்கன்வாடிக் கட்டடங்களைச் சரி செய்வதற்கு சென்ற வருடம் விருதுநகர் மாவட்டத்திற்கு மொத்தமே ரூ.2 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனது தொகுதியில் மட்டுமே 350 அங்கன்வாடி மையங்கள் இருக்கின்றன; பழுதுபார்க்கப்பட வேண்டியவை 120 அங்கன்வாடி மையங்கள். ஆனால், கடந்த இரண்டு வருடங்களிலும் அந்தப் பழுதடைந்த கட்டடங்களை சரி செய்ய முடியாமல் போய்விட்டது. ஆகவே, வரும் வருடத்தில் இந்த அங்கன்வாடி மையத்தை பழுதுபார்க்க ஏற்பாடு செய்தால் நன்றியுடையவனாக இருப்பேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்டியலிலேயே தச்சக்குடி கிராமம் எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பட்டியலிலேயே தச்சக்குடி கிராமத்தை எடுத்துக்கொண்டு, பழுதுகளை நீக்கக்கூடிய பணியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அறிவித்திருக்கின்ற நிதி உதவியின்படி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 398, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*